அமைந்திருக்கிறது. அதற்காக இருக்கிற அகக் குறிப்புகள், அகச் சான்றுகள், புறச்சான்றுகள், ஓவியங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் வைத்து சிலை உருவாக்கப்பட்டிருக்கிறது.

புதுரக வேர்க்கடலை

*591 வினு—**திரு. என். எஸ்.வி. சித்தன்**: மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதிய ரக நிலக்கடலை (Groundnuts) பரீட்சார்த்தமாக ஏதேனும் பயிரிடப்பட்டதா?

(இ) ஆம் எனில், எங்கு பயிரிடப்பட்டது?

(உ) ஏக்கர் ஒன்றுக்குக் கிடைத்த மகசூல் (Yield) எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:

(அ) ஆம், புதிய ரக வேர்க்கடலை டி. எம். வி. 7 முன்னேடி முறையில் பல இடங்களில் பயிரிடப்பட்டது.

(இ) திண்டிவனம் மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் மூன்று ஆண்டுகளும், திருக்குப்பம் நெல் ஆராய்ச்சி நிலையத்தில் ஓர் ஆண்டும், பொள்ளாச்சி வேர்க்கடலை ஆராய்ச்சி நிலையத்தில் மூன்று ஆண்டுகளும், வட ஆர்க்காடு மாவட்டத்தில் உழவர்களது நிலங்களில் 10 இடங்களில் சேர்ந்தாற்போல் மூன்று ஆண்டுகளும் பரிசோதிக்கப்பட்டது.

(உ) சராசரியாக ஏக்கர் ஒன்றுக்கு 585 கிலோ வேர்க்கடலை கிடைத்தது.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, புதிய ரக நிலக்கடலை விளைவிப்பதற்கு மொத்தம் எத்தனை நாட்கள் ஆகின்றன? ஏக்கர் ஒன்றுக்கு உற்பத்தி செய்வதற்கு எவ்வளவு செலவாகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது? புதிய ரக நிலக்கடலையில் எண்ணெய் சத்து எந்த அளவுக்கு இருக்கும் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: மொத்தம் 105 நாட்கள் பிடிக்கும் இந்தப் பயிர் வருவதற்கு. ஒரு ஹெக்டாருக்கு 1,400 கிலோ கிராம் சராசரி விளைச்சல் கிடைக்கும். டி. எம். வி. 2-க்கும், இதற்கும் இருக்கிற வித்தியாசம், டி. எம். வி. 2-ஐ விட டி. எம். வி. 7-ல் நல்ல எண்ணெய் வளமும், பருப்பு வகை அளவு அதிகமாகவும் இருக்கும் என்று கூறப்படுகிறது. பொதுவாக, முழுவதும் முற்றிய நிலைக்குப் பிறகு 15 நாட்கள் வரையில் 93·7 சதவிகித அளவுக்கு இழுக்கும் திறன் பெற்றிருக்கிறது என்று கூறப்படுகிறது. டி. எம். வி. 7 வகைக்கு அதிக அளவு உரமிட்டால், நல்ல முறையில் வரும் என்றும், டி. எம். வி. 2 வகைக்கு அதிக அளவு உரமிட்டால் நல்ல முறையில் வராது என்றும் கூறப்படுகிறது. இந்த இரண்டு வகைகளுக்கும் அதிக வித்தியாசம் இருக்கிறது. டி. எம். வி. 7 வகையில் அதிக எண்ணெய் சத்து இருக்கிற காரணத்தினுல், நல்ல முறையில் வருகிற காரணத்தினுல், 105 நாட்களில் நல்ல பயிர் வருவதினுல், பரீட்சார்த்தமாகப் பல இடங்களில் இந்த வகை பயிரிடப்பட்டு வருகிறது என்று நான் கூற விரும்புகிறேன். ஏக்கர் ஒன்றுக்கு எவ்வளவு செலவாகிறது என்று விவரம் இப்பொழுது இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விவரம் தருகிறேன்.

திரு. நா. வீராசாமி: இந்தப் புதிய ரக வேர்க்கடலையில் நல்ல எண்ணெய் வளம் இருப்பதாகச் சொன்னுர்கள். இன்றையதினம் எண்ணெய் விலை ஏறக்கூடிய நிலைமையில், தமிழக அரசு ஐ. ஆர். 8 போன்ற நெல் வகைக்கு அதை ஊக்குவிக்கும் முறையில் கடன் முதலிய வசதிகள் செய்துகொடுப்பது போன்று, புதிய ரக வேர்க்கடலைக்கும் கடன் வசதி ஏற்பாடு செய்து, நிலக்கடலை உற்பத்தியை அதிகமாக ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: விவசாய மானியக் கோரிக்கை விவாதத்தின்பொழுது விரிவாக அனைவரும் பேச இருக்கிறோம். அப்பொழுது நான் இதற்குப் பதில் கூறலாம் என்று கருதுகிறேன்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்: இந்தப் புதிய ரகம் எல்லா மாவட்டங்களிலும் வினியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா? எக்ஸ்பெரிமெண்டலாக செய்யப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. விதைகள் எல்லோருக்கும் விநியோகம் செய்வதற்கு வழி வகுக்கப்பட வேண்டும். அப்படி இருந்தால், எல்லா மாவட்டங்களுக்கும் வந்ததாகத் தெரியவில்லை. இனிமேலாவது விநியோகம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: புதிய ரகம் என்று தான் சொன்னேன். எனவே, இதை முழுவதும் பரீட்சித்தபிறகு மற்ற மாவட்டங்களுக்கும் கொடுப்பதற்கு ஏற்பாடு நிச்சயம் செய்யப்படும்.

Export of rat skins

* 592 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare, with reference to question No. 456 (576) answered on the floor of the Assembly on 25th March 1969, be pleased to state the steps taken by the Government to explore export market for rat skins?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: சென்னை, மத்திய தோல் தொழில் நுட்ப ஆராய்ச்சி நிலையத்தினருடனும், பெங்களூர், எலி ஒழிப்பு நிறுவனத்தைச் சேர்ந்த திரு. ஒ. ஜி. ராஜாளுவுடனும் தொடர்பு கொள்ளப்பட்டது. எலித் தோலை ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவே என்று விசாரணைகள் மூலம் தெரியவருகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: எலித் தோல் மிக வலுவானது என்றும், எலித் தோலினால் செய்யப்பட்ட பர்ஸுகள், பைகள் எளிதில் கிழிவதில்லை என்றும், ஜெர்மனி முதலிய நாடுகளில் எலித் தோலுக்கு கிராக்கி இருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது. இதுபற்றி அரசாங்கம் ஆராய்ந்ததா ? இதுவரையில் ஆராயாவிட்டால், இதை ஏற்றுமதி செய்வதற்கு வழிவகை செய்யப்படுமா ? அதனால் எலித் தொல்லையும் கொஞ்சம் குறையுமே ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: பங்களூர் எலி ஒழிப்பு நிறுவனத்தைச் சேர்ந்த திரு. ஒ. ஜி. ராஜாளுவுடன் தொடர்பு கொள்ளப்பட்டது. அவர் மிகச் சிறிய அளவுக்குத்தான் எலித் தோலை விரும்புவதாகக் கூறப்பட்டது. இந்த எலித் தோல் என்பதில், பெருச்சாளித் தோல்தான் தேவைப்படுகிறது என்று கூறுகிறார்கள். விவசாயிகள் இவற்றை சாதாரணமாக வயல் வெளிகளில் பிடிக்கிறார்கள். அவற்றை பிடிக்க 10 பைசா, 20 பைசா என்று கொடுக்கப்படுகிறது. பெருச்சாளிகளைப் பிடித்து, உடனேயே தோலை உரித்து, குந்தகம் இல்லாமல் அதை 'பிறைலில்' தோய்த்து, உலர்த்திக் கொடுத்தால், ஒரு தோலுக்கு 25 பைசா வீதம் கொடுக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஆகவே, இது சிரமமாக இருப்பதால் விவசாயிகள் இதில் அக்கறை காட்டவில்லை; இதைத் தொடர்ந்து செய்யமுடியவில்லை.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, வடக்கே இருக்கின்ற ஒரு மந்திரி எலி சத்துள்ள உணவு ....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்தக் கேள்வி அனுமதிக்கப்படவில்லை. திரு. பூபதி.